**கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே" (தொல்-பொருள்1088)**

கற்பு என்பது திருமணத்தைக் குறிக்கும். திருமணத்தோடு சடங்குகளும், தலைவியை கொள்வதற்குரிய தலைவன், கொடுப்பதற்கு உரியோர் தலைவியைக் கொடுக்க மணம் செய்வதனைக் குறிக்கும்.

**"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
**ஐயர் யாத்தனர் கரணம் என்ப" (தொல். பொருள்-1091)**

களவு ஏற்பட்ட காலத்தில் பொய் கூறுதலும், இடையில் கைவிட்டு விலகுதல் முதலான குற்றம் ஏற்பட்டதனால் தந்தை முதலான சான்றோர் கூடி "கரணம்" எனும் மணச் சடங்குகளை நடத்தினர்.

**கற்பில் தோழி கூற்று**

**"பெற்றற்கு அரும் பெரும் பொருள் முடிந்தபின் வந்த**
**தெற்ற கரு மரபின் சிறப்பின் கண்ணும்**
**------------------------------------------------------------------------**
**தோழிக் குரிய என்மனார் புலவர்" (தொல்.பொருள்-1096)**பெறுவதற்கரிதான பொருள் தேடி வந்த தலைவனுடைய அழிவற்ற சிறப்புடைய நிலையில் பாராட்டுதல், பரத்தமையால் தவறு செய்த தலைவனிடம் கடிந்து கூறி தலைமகளை இசைய வைத்து ஒற்றமைப்படுத்துதல், பணிவுள்ள சொற்களால் வணங்குதல், தலைவி பக்கம் நின்று பேசி தலைவனிடம் உள்ள ஊடலை நீக்கச் செய்தல், கற்புக் காலத்து தலைவனிடம் இரக்கத்துடன் பேசுதல், பாணரும், விறலியரும், கூத்தரும் என இவர்கள் போற்றிக் கூறிய குறைகளுக்கு மறுமொழி கூறுதல் என்று பல வகையான கூற்றுகளைக் கூறி தோழி தலைவன் தலைவிக்குத் தூதாக இருக்கின்றாள்.

**வாயில்கள் கூற்று**

**"கற்பும் காமமும் நாற்பால் ஒழுக்கமும்**
**------------------------------------------------------------------**
**அகம் புகல்மரபின் வாயில்கட்கு உரிய" (தொல்.பொருள்-1098)**

இல்லத்தினுள் இருக்கும் தலைவன், தலைவியிடம் பழகும் உரிமையுடையவர் வாயில்கள். துலைவனிடம் தலைவியின் கற்பு நல்வழி ஒழுகுதல், பொறுமை, மனக்கட்டுப்பாடு, விருந்து தருதல், உறவினை காக்கும் முறை போன்றவற்றை வாயில்கள் கூறுவர்.

**"இடித்து வரை நிறுத்தலும் அவரதாகும்**
**கிழவனும் கிழத்தியும் அவர்வரை நிற்றலின்" (தொல்.பொருள்-1101)**

தலைவனையும், தலைவிக்கும் தன் எல்லை தாண்டாது இருவருக்கும் அறிவுரை கூறும் உரிமை அறிவர்க்கு உண்டு.

**"புலத்தலும் ஊடலும் ஆகிய இடத்தும்**
**----------------------------------------------------------------**
**அன்பிலை கொடியை என்றலும் உரியள்" (தொல். பொருள்.1103,1104)**

